# கம்பம் நகராட்சி

**2024-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 21.ஆம் நாள் வெள்ளிக்கிழமை (21,06,2024) பிறபகல் 12.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**கூட்டப்பொருள்**

| | |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் 03/2024, 04/2024, மற்றும் 05/2024-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவுசெய்யலாம். |
| | தீர்மான எண்.473 பதிவு செய்யப்பட்டது |
| 2 | நகராட்சி பொறியாளர் அவர்களின் 03/2024, 04/2024, மற்றும் 05/2024-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவுசெய்யலாம். |
| | தீர்மான எண்.474 பதிவு செய்யப்பட்டது |
| 3 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின்கடிதம் எண்.19009/2022/SBM-1 நாள்.02.01.2024-தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்புறம்) ஆங்கூர்பாளையம் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் 6943மெ.டன் (7714 m3) குப்பைகளைஅகற்றிட ரூ.53.00இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதன்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில், மேற்காணும் பணிகள்மேற்கொள்ள M/s, Sharvesh Constructions நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 01.04.2024-ஆம் தேதிய இவ்வலுவலக கடிதத்தில், குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை அளவீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க, இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்மையம், அண்ணாபல்கலைக்கழகம், சென்னை அவர்களின் 16.04.2024-ஆம் தேதிய கடிதத்தில், ஒப்பந்தகாலம் முடியும் வரை பணிக்கு முன் மற்றும் பணிக்கு பின் குப்பைகளை அளவீடு செய்து வழங்க ஆய்வுக்கட்டணம் உட்பட ரூ. 4,13,000/- (சேவை வரி உட்பட) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் கட்டணத் தொகை ரூ.4,13,000/-ஐ இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களுக்கு அனுப்பும் பொருட்டுமன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2)மேற்காணும்பணியின்அவசரஅவசியம்கருதியும், அரசின் திட்டப்பணியாதலால், பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு ,மேற்காணும் தொகையினை 2024-2025-ஆம் ஆண்டின் பொது நிதியிலிருந்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண்.475 அனுமதிக்கப்பட்டது |
| 4 | கம்பம் நகராட்சிக்குட்பட்ட ஆங்கூர்பாளையம் ரோட்டில் உள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் குப்பை அரைக்கும் இயந்திரத்தில் (Shredding Machine) பழுது ஏற்பட்டுள்ளதையும் மற்றும் அண்ணாமலை நகரில் உள்ள பொருட்கள் மறுசுழற்சிமையத்தில் பிளாஸ்டிக் குப்பைகளை அரைக்கும் இயந்திரம் (Baling Machine) பழுதடைந்துள்ளது. எனவே மேற்காணும் பழுதுகளை சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்குமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2)பொதுசுகாதாரநலன்கருதிமேற்படிபழுதினைசரிசெய்வதற்குஆகும் செலவுத்தொகையினைபொதுநிதியிலிருந்துவழங்கவும்மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1073/2024/இ1) |
| | தீர்மான எண்.476 அனுமதிக்கப்பட்டது |
| 5 | மூலதன மான்யநிதி 2023-2024 – ன்கீழ் ரூ.106.00 இலட்சம் மதிப்பீட்டில், கம்பம் நகராட்சி வார்டு எண்.14-இல் செக்கடி தெருவில் அமைந்துள்ள பாலத்தின் வடிவமைப்பினை கூர்ந்தாய்வு செய்து தருமாறு 04.12.2023 அன்று இந்நகராட்சி மூலம் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. தற்போது அண்ணா பல்கலைக்கழகம், சென்னையிலிருந்து வரப்பெற்ற கடிதத்தில் பாலத்தின் வடிவமைப்பினை கூர்ந்தாய்வு செய்தமைக்கு ஆய்வுக்கட்டணம் ரூ.10,000/- |

ஐ "Director CSRC Anna University Chennai" என்ற பெயரில் வலைவோலையாக அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் ஆய்வுக்கட்டணத்தை அண்ணா பல்கலைக்கழகம், சென்னைக்கு அனுப்புவதற்கு ரூ.10,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.1715/2024/இ1)

தீர்மான எண்.477 அனுமதிக்கப்பட்டது

6 2024-2025-ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ், கம்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் ஜெராக்ஸ் இயந்திரம் பழுதடைந்து சரிவர இயங்காத நிலையில் இருந்துவருகிறது. மேலும் பொறியியல்பிரிவில் திட்டப்பணிகள் அனைத்திற்கும் 01.04.2023 முதல் இணையவழியில் (Online) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி பெறப்படவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பொறியியல் பிரிவில் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை, நகராட்சி நிர்வாகமண்டல இயக்குநர் மற்றும் தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு வாரம், மாதந்திர மற்றும் இதர அறிக்கைகள் அதிகப்படியான நகல்கள் எடுப்பதற்குதற்போதைய ஜெராக்ஸ்இயந்திரத்தில் எடுக்க இயலவில்லை. எனவே பொறியியல் பிரிவிற்கு மேலும் புதிதாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.2,00,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம்

2) 2024-2025-ஆம் ஆண்டுபொதுநிதியின்கீழ் செலவுசெய்வதைமன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.578/2024/இ1)

தீர்மான எண்.478 அனுமதிக்கப்பட்டது

7 சென்னை, நகராட்சி நிர்வாகஇயக்குநர் அவர்களின் 07.03.2024ம் தேதியந.க.6450/2024/SBM-1(1) மற்றும் SBM-1(2) எண்ணிட்ட செயல்முறை ஆணை மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் 08.03.2024ம் தேதிய ந.க.856/2024/பி2 எண்ணிட்டசெயல்முறைஉத்திரவின்படி, இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா 2.0 (6வது SHPC) -2023-24ம் ஆண்டின் கீழ், கீழ்க்கண்ட விவரப்படிபணிகள் மேற்கொள்ளவரப்பெற்ற நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| Sl.No | Name of the Work | Estimate Amt (Rs.in.Lakh) | GOI Share | State Share | ULB Share (Rs.in.Lakh) |
|---|---|---|---|---|---|
| 1. | Construction of Community Toilet for Gents and Ladies at Ward No.07SubramaniyaKovil Street in Cumbum Municipality. | 19.28 | 9.64 | 6.42 | 3.22 |
| 2. | Construction of Community Toilet for Gents and Ladies at Ward No.21KambarayaPerumalKoil Street (MariammanKoil Opp.) in Cumbum Municipality. | 19.28 | 9.64 | 6.42 | 3.22 |
| 3. | Construction of Urinal block at Ward No.21, Bus Stand in Cumbum Municipality | 4.00 | 2.00 | 1.33 | 0.67 |
| 4. | Construction of Micro Compost Center at Old Compost Yard (Angoorpalayam Road) - 4 MT Capacity in Cumbum Municipality | 46.00 | 23.00 | 15.18 | 7.82 |
| 5. | Construction of 3 TPD Material Recovery Facility Center in Cumbum Municipality. | 25.50 | 12.75 | 8.42 | 4.33 |
| | Total | 114.06 | 57.03 | 37.77 | 19.26 |

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

2)மேற்படி பணிக்கு வரப்பெற்ற நிர்வாக அனுமதியில் நகராட்சிபங்குத்தொகையான ரூ.19.26 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்

3)திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2294/2024/இ1)

தீர்மான எண்.479 அனுமதிக்கப்பட்டது

8 மாண்புமிகு NGT உத்தரவைக் கொண்டு, மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திண்டுக்கல் ஆகியவற்றின் மூலம் குப்பைகள் கொட்டப்படும் இடங்களைச்சுற்றி சுற்றுப்புறகாற்றின் தரக்கண்காணிப்பு ஆய்வை நடத்தி, AAQ அறிக்கையை இந்த அலுவலகத்திற்கு ஒருவாரத்திற்குள் அளிக்குமாறு மாவட்டசுற்றுப்புறச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனிஅவர்களின் ந.க.எண்.F.ROA/DEE/TNPCB/THENI/2024 Dated: 08.04.2024-ன் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து, கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான ஆங்கூர்பாளையம் பழைய உரக்கிடங்கின் சுற்றுப்புறம், காற்றின்தரம் ஆய்வு, குவித்துவைக்கப்பட்டகுப்பைகள் ஆய்வு மற்றும் சுற்றுப்புற இரைச்சல் நிலை ஆகியவற்றை ஆய்வு செய்து உத்தரவு வழங்குவதற்கு ஏதுவாக துணை தலைமை அறிவியியல் அதிகாரி, மாவட்டசுற்றுப்புறச்சூழல்ஆய்வகம், திண்டுக்கல்லிருந்து வரப்பெற்ற அறிவிப்பு கடிதம் எண்.DCSO/DEL/TNPCB/AIR/DGL/ 2024- 2025, 08.05.2024 ஆம்தேதிய அறிவிப்பில், 2024-2025-ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் விபரப்படி ஆய்வுக் கட்டணம் செலுத்தவும், அக்கட்டணத்தினை "THE DISTRICT ENVIRONMENTAL ENGINEER, TAMIL NADU POLLUTION CONTROL BOARD என்ற பெயரில் பணம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் விபரப்படி ஆய்வுக்கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl.No. | Description | No. of Stations | Rate (Rs.) | Amount (Rs.) |
|---|---|---|---|---|
| .I | **SAMPLING CHARGES** | | | |
| 1) | Ambient Air Quality Survey PM10, SO2 & NO2 | 4 | 3500.00 | 14000.00 |
| 2) | Ambient Air QualitySurvey PM 2.5 | 2 | 3500.00 | 7000.00 |
| II | **ANALYTICAL CHARGES** | | | 0 |
| 1) | Ambient Air Quality Survey PM10, SO2 & NO2(Each Rs.1,050/-) | 4 | 3150.00 | 12600.00 |
| 2) | Ambient Air QualitySurvey PM 2.5 | 2 | 1800.00 | 3600.00 |
| 3) | Ambient Noise Level testing charges (First 5 Points) | 1 | 7000.00 | 7000.00 |
| III | Transport Charges | | 0 | 5000.00 |
| | | | TOTAL | 49200.00 |

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.860/2024/இ1)

தீர்மான எண்.480 அனுமதிக்கப்பட்டது

9 அரசாணை (நிலை) எண்.94 நாள்.30.03.2023-இல் 01.04.2023-லிருந்து மின்னனுஒப்பந்தப்புள்ளிமூலம்அறிவிப்புவழங்கிஒப்பந்தப்புள்ளிநடைபெறுவதற்குஆணையிடப்பட்டுள்ளது.அதன்படி,கம்பம்நகராட்சியில்பொறியியல்பிரிவில்திட்டப்பணிகள்அனைத்தும்மின்னனுஒப்பந்தப்புள்ளி(OnlineTender)மூலம்பெறப்படுவதால்,கணினியிலிருந்துபதிவிறக்கம்செய்வதற்கும்,திட்டப் பணிகள் சம்மந்தமான கருத்துருக்கள், மதிப்பீட்டு நகல்கள், அவ்வப்பொழுது திட்டப்பணிகளின் அறிக்கையினை (Report) சென்னை, நகராட்சி நிர்வாகஇயக்குநர்,மதுரை,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தேனிமாவட்டஆட்சித் தலைவர் மற்றும் இதர அலுவலகங்களுக்கு நகல்கள் எடுப்பதற்கு பிரிண்டர் டோனர் இருப்பில்இல்லாததால், நகல்பெறுக்கி (Printer) இயந்திரங்களுக்கு(Canon Machine )தற்போது 2024-2025-ஆம்ஆண்டிற்குபுதிதாக 100 டோனர்கள்வாங்கிக்கொள்ளவும், மேலும் அவ்வப் போது தேவைப்படும் அளவுக்கு டோனர் வாங்கி கொள்வதற்கும் உத்தேச செலவினம் ரூ.50,000/க்கும் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படி செலவினத்தை மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.578/2024/இ1)

2) மேற்காணும் செலவினத்தை 2024 -2025-ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.481 அனுமதிக்கப்பட்டது

10 மாண்புமிகு NGT உத்தரவைக் கொண்டு, மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திண்டுக்கல் ஆகியவற்றின் மூலம் குப்பைகள் கொட்டப்படும் இடங்களைச்சுற்றி சுற்றுப்புறகாற்றின் தரக்கண்காணிப்பு ஆய்வை நடத்தி, AAQ அறிக்கையை இந்த அலுவலகத்திற்கு ஒருவாரத்திற்குள் அளிக்குமாறு மாவட்டசுற்றுப்புறச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களின் ந.க.எண்.F.ROA/DEE/TNPCB/THENI/2024 Dated: 08.04.2024-ன் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து, கம்பம் நகராட்சிக்குச்

சொந்தமான குமுளிரோட்டில் உள்ள புதிய உரக்கிடங்கின் சுற்றுப்புறம், காற்றின்தரம் ஆய்வு, குவித்துவைக்கப்பட்டகுப்பைகள் ஆய்வு மற்றும் சுற்றுப்புற இரைச்சல் நிலை ஆகியவற்றை ஆய்வு செய்து உத்தரவு வழங்குவதற்கு ஏதுவாக துணை தலைமை அறிவியியல் அதிகாரி, மாவட்டசுற்றுப்புறச்சூழல்ஆய்வகம், திண்டுக்கல்லிருந்து வரப்பெற்ற அறிவிப்பு கடிதம் எண்.DCSO/DEL/TNPCB/AIR/DGL/ 2024-2025, 08.05.2024 ஆம்தேதிய அறிவிப்பில், 2024-2025-ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் விபரப்படி ஆய்வுக் கட்டணம் செலுத்தவும், அக்கட்டணத்தினை "THE DISTRICT ENVIRONMENTAL ENGINEER, TAMIL NADU POLLUTION CONTROL BOARD என்ற பெயரில் பணம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் விபரப்படி ஆய்வுக்கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவாக மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| Sl.No. | Description | No. of Stations | Rate (Rs.) | Amount (Rs.) |
|---|---|---|---|---|
| .I | **SAMPLING CHARGES** | | | |
| 1) | Ambient Air Quality Survey PM10, $SO_2$ & $NO_2$ | 4 | 3500.00 | 14000.00 |
| 2) | Ambient Air QualitySurvey PM 2.5 | 2 | 3500.00 | 7000.00 |
| II | **ANALYTICAL CHARGES** | | | 0 |
| 1) | Ambient Air Quality Survey PM10, $SO_2$ & $NO_2$(Each Rs.1,050/-) | 4 | 3150.00 | 12600.00 |
| 2) | Ambient Air QualitySurvey PM 2.5 | 2 | 1800.00 | 3600.00 |
| 3) | Ambient Noise Level testing charges (First 5 Points) | 1 | 7000.00 | 7000.00 |
| III | Transport Charges | | 0 | 5000.00 |
| | | | TOTAL | 49200.00 |

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.860/2024/இ1)

தீர்மான எண்.482 அனுமதிக்கப்பட்டது

11 கம்பம் நகராட்சியில் வார்டு எண்.25 கதவு எண்42.நந்தகோபால் சாமி தெற்கு தெருவில் தானியக்கிடங்கு வைத்து நடத்திவரும் திரு.ஐயப்பன் த/பெ தர்மலிங்கம் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். WP(MD)No.1127/2024 – க்கு கம்பம் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை நடத்தி தீர்ப்பு பெற்று தந்த வழக்கறிஞர் திரு. மு.ஹேமகார்த்திகேயன் அவர்களுக்கு மேற்கண்ட வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.1629/2021/எச்1)

தீர்மான எண்.483 அனுமதிக்கப்பட்டது

12 இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3963/2018/எச்1 நாள்.27.02.2020 இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணிகளை செய்து வந்த நிலையில் எதிர்வரும் 30.06.2024 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி பொது மக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.07.2024 முதல் 30.09.2024 வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ12.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு. 1) பொது சுகாதார நலன் கருதி டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தினை 01.07.2024 முதல் 30.09.2024 வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ12.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3963/2018/எச்1)

தீர்மான எண்.484 அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 13 | கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை (7 நகராட்சி பள்ளிகள் 4 அரசு பள்ளிகள்) சுத்தம் மற்றும் வளாக தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.306 நாள்.30.06.2023–இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, கம்பம், பொன்மகள் சுயஉதவி குழுவிற்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை ஒரு வருடத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொண்டுவந்த நிலையில் ஒப்பந்த காலம் முடிவடைந்ததாலும் தற்போது நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருந்த காரணத்தினால் புதிய ஒப்பந்தபுள்ளிகள் கோர இயலவில்லை,தற்போது கோடை விடுமுறை முடிந்து 10.06.2024 முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும்,மாணவ,மாணவிகளின் நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது கம்பம், பொன்மகள் சுயஉதவி குழுவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் 10.06.2024 முதல் 31.12.2024 வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.578/2024/இ1) |
| | 2) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் கம்பம், பொன்மகள் சுயஉதவி குழுவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் 10.06.2024 முதல் 31.12.2024 வரை நீட்டிப்பு செய்து நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3398/2016/எச்1) |
| | தீர்மான எண்.485 அனுமதிக்கப்பட்டது |
| 14 | அரசாணை (MS) எண். 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.04.2021–ன் படி, கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சிமையத்திற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கான கம்பம் நகராட்சியின் வருடாந்திர பங்களிப்பு தொகை ரூ.75000/–யை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.534/2024/சி1) |
| | தீர்மான எண்.486 அனுமதிக்கப்பட்டது |
| 15 | கம்பம் நகராட்சி உதவி பொறியாளர் திரு.ஞா.சந்தோஷ்குமார் 07.08.2023 முதல் 11.08.2023 வரை நகர்புற நீர் வழங்கல் அமைப்பு மற்றும் WTC குறித்த பயிற்சி ஹைதராபாத் ESCI வளாகத்தில் நடைப்பெற்ற பயிற்சியில் கலந்து கொண்டதற்கான பங்களிப்பு தொகை ரூ.88500/–யை Engineering Staff College Of India,Hyderabad நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.534/2024/சி1) |
| | தீர்மான எண்.487 அனுமதிக்கப்பட்டது |
| 16 | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்புஎண். TN 60 X 0499 வாகனத்திற்கு காப்பீட்டுக் காலம் 27.05.2024முதல் 27.05.2025 முடிய உள்ள காலங்களுக்கு காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்கம் பெனிலிமிடெட்டிலிருந்து பிரிமியம் கணக்கீட்டுத்ததாள் வரப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிலிமிடெட், கம்பம் நிறுவனத்திற்கு காப்பீட்டு புதுப்பித்தல் கட்டணத்தொகை ரூ.10,000/–ஐ செலுத்த மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.1056/2024/இ1) |
| | தீர்மான எண்.488 அனுமதிக்கப்பட்டது |
| 17 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரையிலான பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் பகிர்மான குழாய்களில் (D Main, 300MM, DI, CI Pipe, 90MM Pipe) ஏற்படும் உடைப்புகள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு 2024–2025 – ம் ஆண்டிற்கு (01.07.2024 முதல் 31.12.2024) முடியவுள்ள ஆறு மாத காலத்திற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9,85,000/– (ஒன்பது இலட்சத்து என்பத்தைந்தாயிரம் மட்டும்) –க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண்.489 அனுமதிக்கப்பட்டது |

18 கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரையிலான பகுதிகளில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக 249 எண்ணம் சிறுமின் விசை பம்புகள் நிறுவப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை (Submerzible motor, starter, 1.5Sq.mmcable, labercharges) சரிசெய்யும் பணிகளை மேற்கொள்வதற்கு 2024–2025 – ம் ஆண்டிற்கு (01.07.2024 முதல் 31.12.2024) ஆறு மாத காலத்திற்கு மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 9,75,000/– (ஒன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) – க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.490 அனுமதிக்கப்பட்டது

19 கம்பம் நகராட்சிக்கு சொந்தமான லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு 10.43 MLD குடிநீர் பம்ப்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தலைமை நீரேற்று நிலையங்களிலுள்ள குளோரினேசன் பிளான்ட் –இல் குளோரினேசன் சிலிண்டர் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சிலிண்டர்களை வாங்குவதற்கு 2024–2025 – ம் ஆண்டிற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7,80,000/– ( ஏழு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) – க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.491 அனுமதிக்கப்பட்டது

20 கம்பம் நகராட்சி பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் உள்ள கீழ்கண்ட ( 11– எண்ணம்) மின் மோட்டார்கள் மற்றும் மின் தொடர்பு சாதனங்களில் ஏற்படும் (L&T ML panel, Rewinding) பழுதுகளை உரிய பொருட்களுடன் ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு (01.07.2024 முதல் 31.12.2024) உத்தேச மதிப்பீட்டு தொகை 4,40,000 ( நான்கு இலட்சத்து நாற்பதாயிரம்) – க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள கீழ்கண்ட மின் மோட்டார்கள் | சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் உள்ள கீழ்கண்ட மின் மோட்டார்கள் |
|---|---|
| 75 HP– 2 Nos | 10 P – 4 Nos |
| 150 HP– 1 No | 30 HP – 2 Nos |
| | 40 HP – 2 Nos |

அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.492 அனுமதிக்கப்பட்டது

21 கம்பம் நகராட்சி பகுதியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறை கிணறு அமைத்து 23.09.2014 முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டதற்கு, இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண்.365, நாள்.11.09.2023 –ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 31.12.2023–ல் முடிவடைந்த நிலையில், இந்நகர்மன்ற தீர்மான எண்.455, நாள்.21.02.2024 –ன் படி மேலும் 3–மாத காலத்திற்கு 30.06.2024 முடிய பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மேலும் 6–மாத காலத்திற்கு 01.07.2024 முதல் 31.12.2024 வரை அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும், ( மின் பணியாளர் 3, காவலர் 1 நபர்கள்) இதற்கான உத்தேச மதிப்பீடு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் G.S.T உட்பட ரூ. 4,62,000/– க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண்.493 அனுமதிக்கப்பட்டது |
| 22 | கம்பம் நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020 ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத்தால், வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண். 1136/2020/இ2 நாள்.01.12.2020 ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/D02/ நாள்.22.10.2020ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்தாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டதற்கு இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த்தார்ர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண்.456, நாள்.21.02.2024–ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 30.06.2024–ல் முடிவடையும் நிலையில், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு மேலும் 2–மாத காலத்திற்கு (01.07.2024 முதல் 31.08.2024 வரை) அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும்,( மின் பணியாளர்–3, படுகை வடிகட்டி இயக்குநர்–3, காவலர்–12 நபர்கள்) இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI.EPF.GST உட்பட தொகை ரூ.7,80,000/– க்கு (ரூபாய் ஏழு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025– ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண்.494 அனுமதிக்கப்பட்டது |
| 23 | கம்பம் நகராட்சி, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கம்பம் நகரப்பகுதி சாலையோர வியாபாரிகளின் ( வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரித்தினை ஒழுங்கு படுத்துதல்) திட்டம் மற்றும் பதவிக்காலம் நிறைவடைந்து விட்டதால் மாண்புமிகு நகர்ப்புறவளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகள் 2023–இன்படி நகர்ப்பகுதிகளில் புதிதாக தெருவோரவியாபாரிகள் கணக்கெடுப்பு பணிமேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு புதிதாக மின்னணு அடையாளஅட்டை மற்றும் விற்பனைக் குழு சான்றுவழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் GOOD HOPE நிறுவனத்தின்மூலம் புதிதாக பயோமெட்ரிக் அடிப்படையில் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணிமேற்கொள்ளப்பட்டு 785 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மின்னணு அடையாள அட்டை மற்றும் விற்பனைக் குழுசான்று வழங்கப்பட்டுள்ளது.நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்கு படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர். |

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | – | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | – | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | – | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | – | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | – | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | – | 1 |
| அரசு சாரா மற்றும் சமுதாய அமைப்பின் பிரதிநிதிகள் | – | 2 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 785 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | – | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | – | 1 |
| (3) | மகளிர் | – | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | – | 1 |
| (5) | சிறுபான்மையினர் | – | 1 |
| (6) | பொது | – | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றிட மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ் கண்ட விவரப்படியான தேதிகளில் நடத்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம் : – நகராட்சி அலுவலகம், கம்பம்**

**தேர்தல் அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிக்கை பிரசுரித்தல் | 03.07.2024 |
| 2. | வேட்பு மனுக்கள் பெறுதல்<br>(காலை 11 மணிமுதல்மாலை 3 மணிவரை) | 09.07.2024 |
| 3. | வேட்பு மனு செய்வதற்கான இறுதிநாள் | 12.07.2024 |
| 4. | வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல்<br>(காலை 11 மணி முதல் மாலை 3 மணிவரை) | 16.07.2024 |
| 5. | வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல்<br>(காலை 11 மணி முதல் மாலை 3 மணிவரை) | 17.07.2024 |
| 6. | வேட்பாளர் பட்டியல் வெளியீடும் நாள் | 18.07.2024 |
| 7. | வாக்குப்பதிவு நடைபெறும் நாள்<br>(காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை,<br>இடம்– நகராட்சி அலுவலக கூட்ட அரங்கம்) | 31.07.2024 |
| 8. | வாக்குஎண்ணிக்கை நடைபெறும் நாள்<br>( மாலை 6 மணி)<br>இடம் – நகராட்சி அலுவலககூட்ட அரங்கம் | 31.07.2024 |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு. 1) மன்றம்அனுமதிக்கலாம் |
| | 2) மேற்படி தேர்தல் தொடர்பாக ஏற்படும் செலவினங்கள் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.758/2022/எப்1) |
| | தீர்மான எண்.495 அனுமதிக்கப்பட்டது |

ஒப்பம்./–திருமதி.நெ.வனிதா நெப்போலியன்,
நகர்மன்றத்தலைவர்,
கம்பம் நகராட்சி.

நாள் : 18.06.2024
கம்பம்

// உண்மை நகல்//

O/c

ஆணையர்
கம்பம் நகராட்சி

28/6/24 28/6/24